RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s27

OPEN ACCESS

# பண்பாட்டு மானிடவியலில் தமிழக புழங்குப் பொருட்கள்

ஆ.பா. இராமலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில்- 629002, தமிழ்நாடு, இந்தியா.

# Tamil Artefacts in Cultural Anthropology

A.P. Ramalakshmi [a, *]

[a] Department of Tamil, South Travancore Hindu College, Nagercoil-629002, Tamil Nadu, India

* Corresponding Author: ramsundarav08@gmail.com

Received: 09-03-2021
Revised: 10-12-2021
Accepted: 16-12-2021
Published: 07-02-2022

Check for updates

## ABSTRACT

Material culture and other sources, which are the basic source of anthropology, contribute greatly to the evaluation of the course of ancient civilization. Evidence of this can be found in our Sanskrit literature and the numerous artifacts found during archeological excavations. The culture of anthropology is not new, it is the field of knowledge that has been followed over time, social development. Man, who lived naturally with nature, discovered metals along with soil, wood, stone, etc., and used them to find many tools for everyday living needs. He also learned about the pros and cons of the products, as well as the beliefs of the method of use. The existence of antiquities of ancient Tamils in many objects can be traced back to material culture and Sangam literature. Remnants of ancient Tamil civilization are said to have been used in everyday life for household and industrial purposes. There is little doubt that despite the use of machines in modern times, what the superman used is still used by the rural people today.

**Keywords:** Artefacts, Tamil Culture, Anthropology, Remnants

## முன்னுரை

மானிடவியலின் அடிப்படை ஆதாரமாக விளங்கும் பொருள் சார் பண்பாடு மற்றும் பிறசெய்திகள் பண்டைய நாகரிக வளர்ச்சி போக்கை மதிப்பிடுவதற்கு பெருமளவு பங்களிக்கிறது. அதற்கு ஆதாரமாக நம்முடைய சங்க இலக்கியங்களும், தொல் அகழ்வராய்சியின் மூலம் கிடைக்கப்பட்ட ஏராளமான பொருட்களுமே ஆகும். 'மானிடவியலின் பண்பாடு என்பது புதிதாகத் தோன்றியது அல்ல, அவை காலம்காலமாக பின்பற்றப்பட்டு வந்த அறிவின் துறை, சமூகவளர்ச்சி" என்கிறார் ஞா. ஸ்டீபன் அவர்கள். இயற்யோடு இயற்கையாக வாழ்ந்த மனிதன் மண், மரம், கல் முதலியவற்றோடு உலோகங்களையும் கண்டறிந்து, அவற்றை பயன்படுத்தி அன்றாட வாழ்வியல் தேவைக்காக பல உபகரணங்களை கண்டறிந்தான். மேலும், அப்பொருட்களினால் ஏற்பட்ட நன்மை தீமைகள், அவை பயன்படுத்தும் முறை நம்பிக்கைகள் என பல்வேறு நிலையினையும் அறிந்து கொண்டான்.

## மண்கலன்

தொல் பழங்கால மக்கள் மண்ணினால் செய்த கலன்களை பலவகையாக பிரித்து, உணவு சமைக்க குழிசியையும் 'சோறடு குழிசி யிளக விழூஉம்" (பெரும்.365), பானையே ச் சோறு வடிக்க பயன்படுத்தியதை, 'முரவு வாய் குழிசி" (பெரும்.99) அறியமுடிகிறது. மேலும், கருமையான

மண்பாண்டங்கள் இருந்ததை 'பெருங்கண் குறுமுயல் கருங்கலன் உடைய" (Puliyur Kesigan, 2010a), இறந்தவர்களை தாழியில் புதைக்கப்படுவதை 'மா இருந்தாழி கவிப்ப" (Puliyur Kesigan, 2010b), செம்மண் நிலத்தில் முகந்து வந்த நீரை பழஞ்சாடியில் வைத்துள்ளதை 'முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி" (Puliyur Kesigan, 2010a), உப்பு வணிகர்கள் செல்லும் வண்டியில் ஊறுகாய் சாடிகள் வைத்துள்ளதை 'காடி வைத்த கலனுடை மூக்கின்" (பெரும்.55) என்ற பாடல் வரிகளுடன் ஏராளமான செய்திகளை சங்க இலக்கியம் வாழ்வியலோடு எடுத்துக்காட்டுகிறது.

மேலும் நாஞ்சில் நாட்டில் மண்பாண்டங்களோடு தொடர்புடைய பல நம்பிக்கைகள் சார்ந்த மரபு இன்றளவும் பின்பற்றபட்டு வருவதையும் அறியமுடிகிறது. மகப்பேறு பெற்ற பெண்கள் 16 நாள் வரை மண்பாண்டங்களைத் தொடக்கூடாது என்ற நம்பிக்கை மற்றும் தூய்மையின் அடிப்படையில் 'சட்டிப்பானை தொடுதல்" (குழந்தைக்கு பெயர் சூட்டுதல்) என்ற விழா இன்றளவு நிகழ்த்தப்படுகிறது. ஈமக்காட்டில் நடக்கும் இறுதி சடங்கிலும், கோவில் திருவிழாக்களில் தீ சட்டி ஏற்றுதல் மற்றும் பொங்கல் போடுவதற்கும் இக்கலன்களை பயன்படுத்துகிறார்கள். எனவே மண்ணினால் செய்த பல பொருட்கள் வாழ்வின் அன்றாட தேவைகளுக்கு தொடக்கம் முதல் முடிவு வரை பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

## உரல், உலக்கை

உரல் கல்லாலும் அதன் துணைக்கருவியான உலக்கை கருங்காலி மரத்தாலும் ஆனது. அதன் இருமுனைகளும் இரும்பு குப்பியால் செய்யப்பட்டது. தானியங்கள், அழகுப்பொருட்கள், மருந்துகள் மற்றும் பலவகையான பொருட்களை இடிப்பதற்கும் பொடியாக்குவதற்கும் பயன்படுத்தியதை,

'. . . . கவின் குடின் முன்றில்

அவலெறி யுலக்கை . . ." (Bhakthavatsala Bharathi, 2014)

என்ற பாடல்வரிகள் மூலமும்,

திணைக்கதிர்களை சந்தனமர உரலில் இட்டு, யானை தந்தத்தால் செய்த உலக்கையால் இடித்த செய்தியை,

'முகைவளர் சாந்து உரல் முத்தவர் மழுப்பின்

வகைசால் உலக்கை வயின் . . ." (Stephen, 2005)

என்ற வரியும், புல்லரிசியைக் குறிய வைரஉலக்கையால் உரலிலே குற்றியதை,

'குறுகால் உலக்கை ஒச்சி" (Bhakthavatsala Bharathi, 2014)

என்ற வரியும், மூங்கில் நெல்லை பாறை உரலில் இட்டு யானை தந்தத்தால் செய்த உலக்கையில் குற்றியதை,

'கோடு உலக்கையாக நல்சேம்பின் இலை சுளகா

ஆடுகழை நெல்லை அறை உரலுள்"

என்ற பாடல் வரி மூலம் உணரப்படுகிறது (Stephen, 2005).

'குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து"

என்ற சங்க இலக்கிய நூல்கள் பல நமக்கு எடுத்துக்காட்டுகின்றன (Puliyur Kesigan, 2010a). மேலும், முதுகில் சுழுக்குப் பிடித்திருந்தால் உலக்கையைக் கொண்டும் உருட்டும் பழக்கமும், பருவம் எய்திய பெண்களுக்கு உலக்கையை காவலாகக் கிடத்தி வைத்தால் பேய் தொடாது என்ற நம்பிக்கையும் இன்றளவும் நிலவி வருகிறது (Nallamuthu, 2021).

உலக்கையால் தானியங்களை குற்றும் பெண்கள் தலைவனைப் புகழ்ந்து பாடுவதை 'வள்ளைப் பாட்டு" உலக்கைப் பாட்டு மூலம் அறியலாம்.

## வட்டில்

பனை ஓலையால் முடைந்து, அவற்றின் நாரால் முறுக்கிக் கட்டி அப்பெட்டியின் வாயை பனைமட்டையை கொண்டு வட்டவடிவில் செதுக்கி அகத்தையும் புறத்தையும் வட்டவடிவ வளையத்தோடு பனை நரால் முடிதல் ‘வட்டில்’ ஆகும்.

பொதி சுமக்க, நெல்லை அளந்து கொட்ட பயன்படுத்தப்பட்டது. இரண்டுமரக்கால் வட்டியை ‘பதக்கு பிடிக்கும்’ வட்டில் எனவும், 3 மரக்கால் பிடிக்கும் வட்டியை ‘முக்குறுணி’ வட்டில் எனவும், 5 மரக்கால் பிடிக்கும் வட்டிலை ‘3 மரக்கால் பிடிக்கும்’ வட்டில் என கையாண்டனர்.

'அகன் பெரு வட்டி நிறைய மனையோள்” (Singara Vadivelan, 2003)

வட்டி நிறைய உள்ள கெளுத்தி மீனுக்கு மாற்றாக மனையாள் பெரும்பயிற்றினை கொடுத்ததையும், மேலும் வராஅல் மீனை நிறைத்துக் கொண்டு வந்த வட்டியுள் இல்லக்கிழத்தி பழைய வெண்ணெல்லை நிறைய கொடுத்ததையும்,

'வரா அல் சொரிந்த வட்டியுள் மனையோள்

யாண்டுகழி வெண்ணெல்” (Singara Vadivelan, 2003)

சேற்றில் விதைக்கும் விதை நெல்லை வட்டியில் இட்டு சென்றதை

'வித்தோடு சென்ற வட்டி பற்பல”

என்ற பாடல் வரிகள் வழி அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2010b).

## மத்து

தயிர் கடைவதற்குப் பயன்படுத்தினர். தாழியில் மத்தை இட்டு அவற்றுடன் முறுக்கிய கயிற்றைக் கட்டி தயிர் கடைந்தனர். அதிலிருந்து வெண்ணெய், நெய் முதலியவற்றை ப் பிரித்து எடுத்தனர்.

'புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி” (Bhakthavatsala Bharathi, 2014)

## திரிகை

வரகு முதலான தானியங்களைத் திரிக்க வட்ட வடிவ இரண்டு அடுக்கு கல்லால் ஆன கல் கருவியாகும். திரிப்பதற்கான கைபிடி இரும்பு கம்பியில் மேல் அடுக்கு கல்லில் இருக்கும் அதனைக் கொண்டு திரிப்பர்.

'களிற்றுத்தாள் புரையந் திரி . . .” (Bhakthavatsala Bharathi, 2014)

## முறம் (சுளவு)

பனை ஓலை மற்றும் அதன் நாரால் பின்னப்பட்டது. தானியங்கள் மற்றும் அரிசியுள்ள குருணைகளை புடைப்பதற்கும், பொருட்களை வெயிலில் காய வைப்பதற்கும் பயன்படுத்தினர். இரவு நேரத்தில் குறிச் சொல்லி செல்லும் குடுகுடுப்புகாரன் பகல் நேரத்தில் வரும் பொழுது வீட்டுப் பெண்கள் அவன் வருவதற்கு முன்னே அரிசி மற்றும் வீட்டில் உள்ளவர்களுக்கு திஷ்டிகளித்து வைத்த உப்பு, கடுகு, வத்தல், மிளகு முதலியவற்றை முறத்தில் வைத்து விட்டு, அவன் அப்பொருட்களை எடுத்துச் சென்றதும் சுளவை, சாணம் கொண்டு மெழுகி பிறகே சமையல் அறைக்குக் கொண்டு சென்றனர்.

சிறுகுழந்தைகள் ஓயாமல் நெளிந்தாலோ அல்லது முனுமுனுத்துக் கொண்டு இருந்தால் வயதான பெண்கள் முறத்தில் போட்டு எடுக்கும் வழக்கம் உண்டு. அதற்கு ‘உரம் பிடித்தல்’ ‘உரம் தட்டுதல்’ என்ற பெயர் இன்றளவும் நிலவி வருகிறது. பிறந்த குழந்தைக்கு பெயர் சூட்டும் போது,

சுளவில் போட்டு மூன்று முறை வயதான பெண் ஒருத்தி உருட்டி எடுப்பது வழக்கமாக தென்பகுதிகளில் உள்ளது.

அறுவடை நேரங்களில் புடைக்க வேண்டிய பொருளை சுளவில் கொட்டி புடைக்கும் பொழுது உமிகள் காற்றில் பறந்து விடும், கல் மற்றும் குறுணைகள் தனியாக பிரித்து எடுப்பது பெண்களுக்குரிய தனி கலையாகும்.

'சுளவின் சீறிடம் நீக்கி" (Puliyur Kesigan, 2010a)

'. . . . தீங்கொள் வெள்ளெள்

சுளகிடை உணங்கல் செவ்வி கொண்டுஉடன்"

முற்றத்திலே இனிப்பு சேர்ந்து வெள்ளெள்ளை இடித்துச் சுளவிலே காய வைத்திருந்ததைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றது (Puliyur Kesigan, 2010a).

## மரக்கால்

இலக்கியங்களில் 'அம்பணம்' எனக் கூறப்படுகிறது. நான்கு கால் கொண்ட வெண்கல மரக்கால், கொத்து மரக்கால், இரும்பு மரக்கால் (அளவில் சிறியது) என வகைப்படுத்தினர். 8 நாழி ஒரு குறுணி (மரக்கால்) 'பதக்கு' என்னும் பெயரிலும் அழைத்தனர்.

## அகப்பை

சிறட்டையில் மூங்கில் கம்பை இணைத்து வைத்ததை அகப்பை என அழைத்தனர்.

'சோறு சொரி குடையின் கூம்பு முகை அவிலு"

சோறு எடுப்பதற்கு கூம்பு வடிவ அகப்பையை பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது (Puliyur Kesigan, 2010b).

## மரப்பாவை

கருங்காலி, செஞ்சந்தனம் முதலிய மரத்தால் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் உருவப் பாவைகள் ஆகும். இந்த மரபாவையை சாணக்கல்லில் உரைத்து ஒற்றைத்தலைவிக்கு மருந்தாக நெற்றியில் பூசுவர். குழந்தைகளுக்கு இப்பொம்மைகளை விளையாடக் கொடுப்பார்.

தலைவனோடு உடன்போக்கு சென்ற தலைவிக்கு பூ கொய்து கொடுத்ததாகவும் தானும் சூடி, தன் கையிலுள்ள பாவைக்கு சூடியதை,

'பஞ்சாய்ப் பாவைக்கு தனக்கும்

அஞ்சாய்க் கூந்தல் . . .."

இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது (Singara Vadivelan, 2003).

## உழவுக் கருவிகள்

நிலத்தை உழுவதற்கு மரத்தினால் செய்து, இரும்பினால் 'கொழு' அமைத்து, இரண்டு மாட்டின் தலையை வைப்பதற்கு பயன்படுத்தும் அந்த கட்டையின் பெயர் 'நொகம்' அல்லது 'நுகம்' என்று அழைத்தனர்.

'சிறுதுளைக் கொடுநுகம் நெறியட நிரைத்த" (Bhakthavatsala Bharathi, 2014)

'குடிநிறை வல்சிச் செஞ்சாலுழவர்

நடைநவில் பெரும்பகடு புதவிற்பூட்டிப்

பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்"

என்ற பாடல்வரிகள் மூலம் அறியலாம் (Bhakthavatsala Bharathi, 2014).

உழுத நிலத்தை சமநிலைபடுத்த 'மரம்' என்ற பொருளைப் பயன்படுத்தினர். இரும்பு சங்கிலியை அம்மரத்தோடு சேர்த்து கட்டி இழுக்க பயன்படுத்தினர். நடுவு சமயத்தில் தொளி நிறைந்த வயலை மரவு அடித்த பிறகு, மேடும் பள்ளமும் இல்லாமல் விதையை நடுவதற்கு 'தொளி தட்டு' என்ற பலகையை கொண்டு சமநிலைப் படுத்தியதையும், மண்வெட்டி, அரிவாள் முதலிய இரும்புப் பொருட்கள் பயன்படுத்தியதையும் அறியமுடிகிறது.,

'உடுப்பு முக்கொழு மூழ்க வூன்றித்" (Bhakthavatsala Bharathi, 2014)

'செற்றெல் அரிநர் கூர் வாட் புண்ணுற" (Puliyur Kesigan, 2010b)

செந்நெற்கதிர்களை அறுக்க கூர்மையான அரிவாளை பயன்படுத்தினர்.

'கண்முடைத் தடவில் புள்" (Puliyur Kesigan, 2010b)

என்ற நற்றிணை பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகிறது.

## முடிவுரை

வெற்றிலை தட்டுவதற்கு 'குழி அம்மி'யும், உப்பு போட்டு வைப்பதற்கு உப்பு மரவையும், மண்தோசைக்கல், பித்தளை பொருட்கள், அம்மி அதன் துணைக் கருவியான குழவி மற்றும் சாதத்தை மூடி வைப்பதற்கு 'சோத்துப் பலகை' உணவு உண்ண, மீதி வந்த உணவை மாற்றி வைக்க உருளை வடிவ மரவைகளையும் பயன்படுத்தினர். சந்தனம் அரைப்பதற்கு சாணக்கல்லும், மாடுகளுக்கு கழனிநீர் கலக்கி வைப்பதற்கு கல்தொட்டியும், குங்கும செப்பு, பலா மரத்தால் செய்த செப்பண்டங்களும், இரும்பு, உலோகம், மண், மரம் எனப் பல பொருட்களில் பண்டைய தமிழர்களின் புழங்குப் பொருட்கள் இருந்ததை பொருள் சார் பண்பாட்டின் மூலமும் சங்க இலக்கியத்தின் வாயிலாகவும் அறியமுடிகிறது. தொன்மையான பண்டைய தமிழனின் நாகரிகத்தின் எச்சமாக விளக்கும் புழங்கு பொருட்கள் அன்றாட வாழ்வியலில் தேவைகளான வீட்டு உபயோகத்திற்கும், தொழிலுக்கும் பயன்படுத்தியதை அறியமுடிகிறது. தற்போதைய நவீன காலத்திலும் இயந்திரங்களின் பயன்பாடுகள் இருந்தாலும் ஆதிமனிதன் பயன்படுத்தியதை இன்றைக்கும் கிராமப்புற மக்கள் பயன்படுத்தி கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## References


Bhakthavatsala Bharathi, (2014) Ilakkiya Manudaviyal, Adaiyalam Publications, Chennai, India.

Nallamuthu, R., (2021). A Research on Frequently used Products from Sangam Literature. International Research Journal of Tamil, 3(4), 6-15. https://doi.org/10.34256/irjt2142

Puliyur Kesigan, (2010a) Purananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2010b) Natrinai, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Singara Vadivelan, A., (2003) Ainkurunuru, Makkal pathippu, Chennai, India.

Stephen, G., (2005) Ilakkiya Inavaraiviyal, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License